# யூன்– 16 – சனி

## புனித யோன் பிரான்சிஸ் றெயிஸ்

## “ஆம்“ என்றால் “ஆம்“ எனவும் “இல்லை“ என்றால் “இல்லை“ எனவும் சொல்லுங்கள். – மத்தே.5 :37

## முதல் வாசகம் : 1 அரசர் 19 : 19 – 21

அக்காலத்தில் எலியா அங்கிருந்து சென்று, சாபாற்றின் மகன் எலிசாவைக் கண்டார். அப்பொழுது அவர் ஏர்பூட்டி உழுதுகொண்டிருந்தார். அவருக்கு முன்னே பதினோர் ஏர்கள் இருந்தன. பன்னிரண்டாம் ஏரைத்தாமே ஓட்டிக்கொண்டிருந்தார். எலியா அவரிடம் சென்று, தம மேலாடையை அவர்மீது தூக்கிப் போட்டார்.எலிசா அவரைக் கடந்துசெல்கையில் ஏர் மாடுகளை விட்டுவிட்டு எலியாவிடம் ஓடிவந்து, ”நான் என் தாய் தந்தையிடம் விடைபெற்று வர அனுமதிதாரும். அதன்பின் உம்மைப் பின்செல்வேன்” என்றார். அதற்கு அவர், ”சென்றுவா, உனக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன்!” என்றார்.எலிசா எலியாவை விட்டுத் திரும்பிவந்து, ஏர்மாடுகளைப் பிடித்து, அடித்துத் தாம் உழுத கலப்பைக்கு நெருப்பு மூட்டி, அம்மாட்டு இறைச்சியைச் சமைத்து, மக்களுக்குப் பரிமாற அவர்களும் அதை உண்டனர். பின்பு அவர் புறப்பட்டுப்போய் எலியாவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்யலானார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து

## நற்செய்தி : மத்தேயு 5 : 33 – 37

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:மேலும், ”பொய்யாணை இடாதீர். ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்துவீர்” என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனென்றால் அது கடவுளின் அரியணை.மண்ணுலகின் மேலும் வேண்டாம் ஏனெனில் அது அவரின் கால்மணை. எருசலேம் மேலும் வேண்டாம் ஏனெனில் அது பேரரசரின் நகரம்.உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது.ஆகவே நீங்கள் பேசும்போது “ஆம்“ என்றால் “ஆம்“ எனவும் “இல்லை“ என்றால் “இல்லை“ எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது“ என்றார்.

**தியானம்:** எமது வாழ்க்கையில் சில விலக்கப்பட்ட பேச்சுக்கள் இருக்கின்றன. சிலவகையான பேச்சுக்களை மட்டுமல்ல சிலரோடு பேசுவதே தவறெனநாமே விலக்கி வைத்திருக்கிறோம். சிலவற்றை நாம் பேசக்கூடாதென முன்னோர் கற்றுத்தந்துள்ளார்கள். இவற்றிற்கும் மேலாக ஆண்டவர் இயேசு, “நீங்கள் பேசும்போது ஆம் என்றால் ஆம் எனவும், இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்து வருகிறது “(மத்தேயு 5 : 37) என்கிறார் என்பதனை நற்செய்தி கற்பிக்கிறது. முன்னொரு நாளில் ”மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாகக், கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் என மறைநூலில் எழுதியுள்ளதே” (மத்தேயு 4 : 4) என்ற இயேசு, இன்றைய நற்செய்தியில் “ஆகவே நீங்கள் பேசும்போது ஆம் என்றால் ஆம் எனவும், இல்லை என்றால் இல்லை என்வும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடமிருந்து வருகிறது“ (மத்தேயு 5 : 37) என்கிறார். மின் கணனி யுகத்தில் எமது வாய்ச்சொல் கடவுளின் வாய்ச்சொல்லை ஒத்திருக்கிறதா? அல்லது எமது வாய்ச்சொல்லால் மற்றவர்களின் பசியை, காயத்தை, கோபத்தை. இல்லாமையை அதிகப்படுத்துகிறோமா? இன்று குறுகிய வழிக்குள் வேகமாக நுழைய விரும்புகின்றோம். எதையும் நிதானமாக உணர்ந்து பேசும் பக்குவம் மெலிந்துவிட்டது. எமது தீய பேச்சுக்களால் குறுக்கு வழியில் தேடிக்கொள்பவை நம்மோடு ஒட்டிக்கொள்வதில்லை என்பதனை மறந்து வாழுகிறோம். வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக வாழவேண்டுமாயின் “சாத்தான் வேதம் ஓதுகிறது“ என்பது போலுள்ளாது, ஆண்டவர் இயேசுவின் போதனைக்கேற்ப வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பது உண்மை. “நெஞ்சில் உரமும் இன்றி நேர்மை திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரடி கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி!“ என்றார் பாரதி. நெஞ்சில் உரம் இல்லாமல் பொய்பேசி பாம்பின் வஞ்சனையாலும் தன் வாய்ச்சொல்லாலும் வீழ்ந்தாள் ஏவாள் என்ற முதல்பெண். நெஞ்சில் உரத்துடன், நேர்மை திறத்துடன் உன் சொல் இது - என் சொல் இது என சொல்வரையறை செய்து வென்றார் இயேசு. எனினும் நீங்களும் நானும் எந்தப் பக்கம்?